## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மகாலிங்கம் | நாள் | 21.01.2025 |
| தகப்பனார் பெயர் | கண்ணுபையன் | | |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

46) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் 2 வது பதிவாக கடந்த 29.05.1970 ம் தேதியில் சிவசாமியிடமிருந்து தங்கம்மாள் பத்திர எண்.1162/1970 ன்படி ரூ.2,000/-க்கு சொத்தை கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ச.எண்.534/3B ல் 2.18 ஏக்கர் நிலத்தில் 0.30 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. ச.எண்.534/3 ல் தான் மொத்தம் 2.18 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் 2 வது பதிவில் ச.எண்.534/3B என உள்ளது என்றால், அதில் அவ்வாறு குறிப்பிடவில்லை. "நஞ்சை" என்பதற்கு சுருக்கமாக "ந" என தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

47) மேலே நான் சொல்வது போல் வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் 2 வது பதிவில் அவ்வாறு "B" என குறிப்பிடப்படவில்லை என்றோ, "நஞ்சை" என்பதைத்தான் சுருக்கமாக "ந" என குறிப்பிட்டுள்ளார்கள் என்றோ என் நிரூபண பிரமாண பத்திரிக்கையில் குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. ஆனால், எந்த தேதியில் எவ்வளவு சொத்தை கிரயம் பெற்றுள்ளோம் என சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் 2 வது பதிவில் "B" என தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், "நஞ்சை" என்பதை சுருக்கமாக "நஞ்" என தான் குறிப்பிடுவார்கள் என்றாலும், தற்போது வழக்கிற்காக மேற்கண்டவாறு பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

48) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 அ-பதிவேட்டில் ச.எண்.534/3A ல் யார் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், தங்கம்மாள் என்பவர் பெயர்

குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் என்றால், 0.32.0 ஏர்ஸ் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அளவு 0.79 செண்ட் என்றால், சரிதான். மேற்படி நிலம் முழுவதும் எங்களுடையது என்றால், சரிதான். ச.எண்.534/3B யார் பெயரில் உள்ளது என்றால், C.நடராஜன் என்பவர் பெயரில் உள்ளது. எவ்வளவு விஸ்தீரணம் என்றால், 0.35.5 ஏர்ஸ் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது.

49) மேற்படி நடராஜன் என்பவர் தான் 1ம் பிரதிவாதியின் மாமனார் மற்றும் 2, 3 பிரதிவாதிகளின் பாட்டனார் என்றால், சரிதான். கிரய ஆவண எண்.1162/1970 ஐ நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 சிட்டாவில் செல்வராஜ் மனைவி கலா (எ) கலையரசி என்பவர் யார் என்றால், மேற்படி நடராஜன் என்பவரின் மகள் ஆவார். ராணி என்பவரும் மேற்படி நடராஜன் என்பவரின் மகள் என்றால், சரிதான்.

50) மேற்படி நடராஜனின் மகள்களான கலா (எ) கலையரசி, ராணி ஆகியோர்களுக்கும் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்குமிடையே இதே நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால், சரிதான். மேற்படி பதிலுரையில் கண்டுள்ள சங்கதிகளை நான் நேரடியாக படித்து பார்த்துள்ளேனா என்றால், படித்து பார்த்து சொல்லியதன் பேரில் நான் தெரிந்துகொண்டேன். அவ்வாறு நான் சொல்லும் நிலையில்,மேற்படி பதிலுரையில் கலா (எ) கலையரசி, ராணி ஆகியோர்களுக்கும், இந்த பிரதிவாதிகளுக்குமிடையே வழக்கு நடைபெற்ற விவரத்தை பற்றி என் வழக்கறிஞர் என்னிடம் கூறியுள்ளாரா என்றால், கூறியுள்ளார்.

51) தற்போது என்னிடம் காட்டப்படும் பதிலுரையில் அ.வ.எண்.215/1998, அ.வ.எண்.225/1998 ஆகிய வழக்குகள் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். அ.வ.எண்.215/1998 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்தும், அ.வ.எண்.225/1998 என்ற வழக்கு பிரதிவாதிகளுக்கு ஆதரவாக

தீர்ப்பாகியுள்ளது என்ற விவரமும் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி இரு வழக்குகளுக்கும் எதிராக மேற்படி கலையரசி, ராணி ஆகியோர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் பதிலுரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

52) அவ்வாறு பதிலுரையில் மேற்படி வழக்குகள் குறித்து சொல்லப்பட்டுள்ள நிலையில், மேற்படி வழக்குகள் யார் யாருக்கிடையே நடைபெற்றது என்பது குறித்தோ, எந்த சொத்து தொடர்பாக மேற்படி வழக்கு நடைபெற்றது என்பது குறித்தோ நான் தெரிந்து கொள்ள முயற்சி செய்தேனா என்றால், தெரிந்து கொண்டேன். எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால், மேற்படி பதிலுரையிலேயே மேற்படி வழக்கின் தீர்ப்பாணை குறித்து சொல்லப்பட்டிருந்தது. அதை பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி வழக்குகளில் எந்த சர்வே எண்கள் தொடர்பாக எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பரிகாரம் கோரப்பட்டிருந்தது என தெரிந்து கொண்டேனா என்றால், இரண்டு சர்வே எண்கள் குறித்து மட்டும் தெரிந்து கொண்டேன். ச.எண்.534/4 ல் 0.90 சென்ட் நிலத்திற்கும், ச.எண்.534/3 ல் 0.36–1/4 சென்ட் நிலத்திற்கும் மேற்படி வழக்குகள் நடைபெற்றது குறித்து தெரிந்துகொண்டேன்.

53) ச.எண்.534/3 ல் 0.36–1/4 சென்ட் நிலத்திற்கு பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்பதை நான் தெரிந்து கொண்டேன் என்றால், சரிதான். ச.எண்.534/3B ல் தீர்ப்பான விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. தற்போது என்னென்ன பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், ச.எண்.534/3C ல் 0.09 சென்ட் நிலம் குறித்தும், 0.13 சென்ட் நிலம் குறித்தும், என் தந்தைக்கு வாய்மொழி பாகபிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளேன். இதை தவிர வேறு எந்த பரிகாரம் நான் கேட்கவில்லை என்றால், சரிதான்.

54) சிவசாமியின் தந்தை பெயர் என்னவென்றால், சுந்தரராஜன் ஆகும். சுந்தரராஜனுக்கு ச.எண்.534/3C ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால், 1.09 ஏக்கர் நிலம் உள்ளது. சிவஞான சுந்தரம் யார் என்றால் மேற்படி சுந்தரராஜனின் இரண்டாவது மகன் ஆவார். மேற்படி சிவஞான சுந்தரத்திற்கு ச.எண்.534/3C ல் எவ்வளவு நிலம் உள்ளது என்றால், 0.13 செண்ட் நிலம் உள்ளது. பழனியப்ப கவுண்டர் யார் என்றால், என் பாட்டனார் ஆவார். மேற்படி ச.எண்.534/3C ல் பழனியப்ப கவுண்டருக்கு நிலம் பாத்தியப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ச.எண்.534/3C ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 0.52 செண்ட் நிலம் உள்ளது.

(1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.